# நீர்கொழும்பு மாநகர சபை
# கம்பஹா மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 22 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் நீர்கொழும்பு மாநகர சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நீர்கொழும்பு மாநகர சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) 06 செயற்திட்டங்களுக்குரிய கடன் பணத்திற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய தவணைப்பணங்களின் பெறுமதி ரூபா 13,521,990 தொகை மற்றும் முன்னைய வருடங்களுக்குரிய ரூபா 3,380,497 தொகை என்பன நடைமுறைப் பொறுப்பாகக்காட்டப்படாமல் நீண்ட கால பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தப்பட வேண்டிய மாகாண அரச சேவை ஓய்வூதிய பங்களிப்புப் பணம் ரூபா 2,445,971 தொகையாக கணக்குகளில் வைக்கப்பட்டிருந்த போதிலும் மாகாண ஓய்வூதிய அரசசேவை ஓய்வூதிய பங்களிப்பு பற்றுச்சீட்டுக்களின் பிரகாரம் அம்மீதி ரூபா 2,282,851 ஆக இருந்தது. மேலும் இப்பணத்தில் எத்தொகையும் மீளாய்வாண்டின்போது செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சொத்துக்கள் தடைசெய்யும் உத்தியோகத்தரினால் 2010 செப்தெம்பர் 01 ஆந் திகதி வைப்பிலிடப்பட்ட ரூபா 10,000 தொகை பல்லின வைப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 8,974,841 தொகை மற்றும் முன்னைய வருடத்திற்குரிய ரூபா 2,243,710 தொகைகளான உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் வட்டிப் பணம், அட்டுறு செலவினமாக கணக்குகளில் வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,310,819 தொகை முன்னைய வருடத்திற்காகச் செலுத்த வேண்டிய வட்டியாக இருந்ததுடன் அது மீளாய்வாண்டின் செலவினமாக கணக்குகளில் வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக விலக்களிக்கப்படுகின்ற பெறுமதிசேர் உள்ளீட்டு வரிக்கு மேலதிகமாக விலக்கமளிக்கப்படாத சகல பெறுமதி சேர் உள்ளீட்டு வரிச் செலவினமும் அக்கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தமையினால் ஆண்டின் இறுதியில் அக்கணக்கு ரூபா 5,847,882 தொகை வரவு மீதி ஏற்பட்டிருந்தது.

(ஊ) ஊழியர் கடன் மேலதிக அறவீடு ரூபா 25,975 தொகை ஊழியர் கடன் மீதியில் கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது 2006 முதல் 2009 வரையான ஆண்டுகளுக்காக கிடைக்கப் பெற்ற ரூபா 59,346,604 தொகையான முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணமாக கணக்கு வைக்கப்பட்டிருந்த ரூபா 48,236,350 தொகைக்கு ஈடுசெய்யப்பட்டு மீதி வருடத்தின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக பெறப்பட்ட மொத்தத் தொகையும் பெற வேண்டிய கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமையினால் மீளாய்வாண்டில் பற்றுச்சீட்டிடப்பட்ட ரூபா 60,000,000 தொகையானது ரூபா 48,889,746 எனக் கணக்குகளில் காணப்படுகின்றன.

(ஏ) 2010 ஆம் ஆண்டிற்குரிய வெளியீட்டு வரி ரூபா 8,606,827 தொகையாக பெறுமதிசேர் வரிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும் வரி அறிக்கை தயாரிக்கின்ற போது அத்தொகை ரூபா 8,462,730 தொகையாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

03 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 140,119,774 ஆக இருந்ததுடன், பட்டோலைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 138,445,874 ஆக இருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்காக சான்றுகள் இன்மை

(அ) கணக்காய்விற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 30,202,381 இற்கான கொடுக்கல், வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதுள்ளது.

(ஆ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2011 மார்ச் 31 ஆந் திகதி வரையில் 08 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளிக்கப்படாதிருந்ததுடன் அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல், வாங்கல்களின் பெறுமதி ரூபா 16,940,703 ஆகும்.

### 1.3.4 கணக்குகளில் பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள்

வங்கிக் கணக்குகளில் மீத / மேலதிகப்பற்று என தனித்தனியாகக் காட்டுவதற்குப் பதிலாக ஒன்றாகச் சேர்த்துக் காட்டப்பட்டிருந்தமையினால் இலங்கை வங்கியின் 0001372353 ஆம் இலக்க கணக்கில் ரூபா 59,190,038 தொகையான மேலதிகப் பற்று கணக்குகளினூடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 தீர்க்கப்படாத கணக்குகள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாது கணப்படுகின்ற கணக்கு மீதிகள் ரூபா 22,059,878 ஆகும்.

### 1.3.6 இணங்காமைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாண அறிவுறுத்தல்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) பொது நிருவாக சுற்றறிக்கை** | |
| 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 06/2008 ஆம் இலக்க சுற்றுநிருபம் | தொடர்புடைய சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஓய்வூதியச் சம்பளத்தில் வாழ்ச்செலவுப் படியின் ஒரு பகுதி உள்ளடக்கப்படுகின்றமையினால் எடுக்கப்பட்டிராத விடுமுறையின் அடிப்படையில் கடமைபுரிகின்ற ஓய்வூதிய உத்தியோகத்தருக்கு வாழ்க்கைச் செலவுப் படித் தொகையினை விஞ்சும் வகையில் கொடுப்பனவு மேற்கொள்ள முடியாதிருந்த போதிலும் சபையின் மூன்று உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றுச் சென்றதன் பின்னர் எடுக்கப்பட்டிராத விடுமுறைக்காக கடமையாற்றியதற்காக கொடுப்பனவு செய்யப்படுகின்றபோது சம்பளத்துடன் வாழ்க்கைச் செலவுப் படி முழுமையாகச் செலுத்தப்பட்டிருந்தமையினால் ரூபா 17,922 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| **(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருபம்** | |
| (i) 1988 ஏப்ரல் 20 ஆந் திகதிய 88/20 ஆம் இலக்க சுற்றுநிருபம் | நிலுவை வருமானம் எக்காலப் பகுதிகளுக்குரியது எனக் காண்பிக்கும் கூற்றொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2007 ஒக்தோபர் 23 ஆந் திகதிய எல்ஜீடீ/5/5/2 ஆம் இலக்க சுற்றுநிருபம் | 2006 மே 31 ஆந் திகதி தொடக்கம் அமுல்படுத்தும் வகையில் சினிமா அரங்குகளிலிருந்து அறவிடப்படுகின்ற களியாட்ட வரிப்பணம் வரையறுக்கப்பட்ட |

காரணத்தினால் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரித்தற்றதாகும் களியாட்ட வரித்தொகையை மீளளிப்புச் செய்வதற்கு அரசினூடாக செய்ய முடியாது என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக பெறவேண்டிய வரியாக ரூபா 1,864,812 தொகை பற்றுச்சீட்டிடப்பட்டிருந்தது.

(இ) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் சுற்றுநிருபம்

| | |
|---|---|
| 2006 மே 15 ஆந் திகதிய 2 ஆம் இலக்க முத்திரை வரிகள் சுற்றுநிருபம் | சேகரிக்கப்படுகின்ற முத்திரைக் கட்டணம் ஒரு காலாண்டு முடிவடைந்ததும் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டிய போதிலும் தொடர்ந்தும் தீர்க்கப்படாதிருந்த முத்திரை வரி மீதி ரூபா 731,550 ஆகும். |

**(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்**

| | | |
|---|---|---|
| (i) | நி.பி. 272(3) | பொதுக் கணக்கின் 2010 சனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் போன்ற 03 மாதங்களின் தெரிவுப் பரிசோதனையின்போது ரூபா 22,912,975 கூட்டுத்தொகையான 111 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி. 189 , 486 | ரூபா 464,582 தொகையான மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக தொடர்புடைய |

| | | |
|---|---|---|
| | | பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை |
| (iii) | நி.பி. 396 | காசாக்கப்படாமல் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட ரூபா 10,132,372 கூட்டுத் தொகையான 297 காசோலைகள் நிராகரிக்கப்பட்டு அதன் பெறுமதிகள் உரிய கணக்குகளில் செலவு வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நி.பி 565(3) | ஒவ்வொரு வைப்புப் பேரேட்டுக் கணக்குகளும் மாதாந்தம் சமப்படுத்தப்பட்டு மீதிகளின் பொழிப்பொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (v) | நி.பி 565(4) மற்றும் (5) | தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம் முன்னைய வருடங்களின் வைப்புப் பேரேடுகளின் மீதிகள் முன்கொண்டுவரப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் வைப்புக்களிலிருந்து கொடுப்பனவு செய்கின்றபோது சரியாக இருந்தமைக்காக பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரினால் கையொப்பம் இடப்பட்டிராததுடன் பொது 71 மாதிரிப் படிவம் தயாரிக்கப்பட்டு மாதாந்த வைப்பு பொழிப்புக் கூற்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | நி.பி 572(1),(2) | வருமானத்திற்கு மாற்றப்படுகின்ற |

தொகை தொடர்பான விபரப்பட்டியல் உரிய கொடுப்பனவு உறுதிச் சீட்டில் இணைக்கப்பட்டிராததுடன் மாற்றங்களுக்குரிய பட்டியல் அங்கீகரிக்கப்பட்டிருக்கவும் இல்லை. மேலும் வைப்புக்கள் வருமானத்திற்கு மாற்றப்பட்டமைக்காக அந்தந்த காலம் கடந்த வைப்பு விடயங்களின் முன்னால் மாற்றங்கள் குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் சபை வருமானத்திற்கு எடுத்த எந்தவொரு வைப்புக்களின் முன்னாலும் அவ்வாறான குறிப்புக்கள் இடப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 95,411,537 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 94,844,269 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடுகள்

(அ) மீளாய்வாண்டின்போது பொது வங்கிக் கணக்கில் கணிசமான அளவு மேலதிகப்பற்று காணப்பட்டமையினால் ரூபா 3,491,223 தொகை மேலதிகப்பற்று வட்டி செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஏனைய நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட மேலதிக மீதிகளை உபயோகித்து மேலதிகப்பற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 திசெம்பர் மாதத்தின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் இனங்காணப்படாத வரவு ரூபா 880,549 தொகை மற்றும் செலவு ரூபா 750,830 தொகை என்பன தொடர்பாக வங்கியில் விசாரித்து பின்தொடர் நடடிவக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 11 நிலையான வைப்புக்களுக்குரிய இலங்கை வங்கியினால் அறவிடப்பட்டிருந்த நிறுத்தி வைத்தல் வரிப் பணம் ரூபா 258,400 தொகையினை மீள அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மதிப்பீடு செய்யப்பட்ட, உள்ளவாறான மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு என்னால் 2011 மார்ச் 08 ஆந் திகதி மாநகர ஆணையாளரிடம் கோரப்பட்டும் மற்றும் மீள நினைவுபடுத்தப்பட்டிருந்த போதிலும் இது வரை உரிய விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 நீதி மன்றத் தண்டப்பணம்

வருமானத் தலைப்பு 10352 இன் கீழ் நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 18,000,000 தொகை பற்றுச் சீட்டிடப்பட்டிருந்த போதிலும் பெறுவனவுகள் ரூபா 55,934 ஆக இருந்ததுடன் பற்றுச்சீட்டிடப்பட்ட அடிப்படை கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 ஏனைய வருமானம்

ராஜபக்ஷ பூங்காவை வாடகைக்கு விட்ட வகையில் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 3,783,333 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. 2009 ஆம் ஆண்டின் போது இப்பூங்காக சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் நிலுவை மீதியினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவு விடயம் | பாதீடு | உள்ளவாறானது | முரண் | பாதீடு | உள்ளவாறானது | முரண் |
| மீண்டுவரும் செலவுகள் | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ | ரூபா.000’ |
| ஆளுக்குரிய வேதனம் | 174,360 | 147,796 | 26,564 | 150,287 | 141,252 | 9,035 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஏனையவை | 175,577 | 120588 | 54,989 | 139,669 | 121,555 | 18,114 |
| | ---------- | ---------- | ---------- | ---------- | ---------- | ---------- |
| உப கூட்டுத் தொகை | 349,937 | 268,384 | 81,553 | 289,956 | 262,807 | 27,149 |
| மூலதன செலவுகள் | 62,967 | 91,705 | (28,738) | 93,417 | 241,496 | (148,079) |
| | ---------- | ---------- | ---------- | ---------- | ---------- | ---------- |
| மொத்தக் கூட்டுத் தொகை | 412,904 | 360,089 | 52,815 | 383,373 | 504,303 | (120,930) |
| | ====== | ====== | ====== | ====== | ====== | ====== |

## 2.5 மிகைக்கட்டண அறவீடு

மாநகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) 226(1) ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் கீழ் உரிய பொறுப்பான அலுவலர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகைக்கட்டணங்களுக்கு அமைய 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த மிகைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 2,013,394 ஆகும்.

## 2.6 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

2010 திசெமப்ர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் 2011 மார்ச் 08 ஆந் திகதி என்னால் கோரப்பட்டும் மற்றும் மீள நினைவுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அத்தகவல்கள் இவ்வறிக்கைத் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.7.1 அறவிடவேண்டிய பதவினர் கடன்கள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சேவை முடிவுறுத்தப்பட்ட இரண்டு நாட்கூலித் தொழிலாளர்களிடமிருந்து அறவிடவேண்டிய விழா மற்றும் விசேட முறபணங்கள் முறையே ரூபா 1,700 மற்றும் ரூபா 1,154 தொகைகள் ஆக இருந்ததுடன் 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து 20 ஊழியர்களிடமிருந்தும் ரூபா 305,678 தொகையான மீதி அறவிட வேண்டியிருந்தது.

### 2.7.2 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளின் மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதியில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 116 மில்லியன் ஆகும்.

### 2.8 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

### 2.8.1 வெல்ல வீதி மீன் வியாபாரக் கடைகளுக்கு முன்னாலுள்ள தனியார் வாகனத் தரிப்பிடம்

வெல்ல வீதி மீன் வியாபாரக்கடைகளில் மீன் கொள்வனவுகளுக்காக வருகைதரும் வாகனங்களுக்கு சபையின் அங்கீகாரம் / அனுமதி / அனுமதிப்பத்திரம் இன்றி மோட்டார் வகனங்கள் நிறுத்தப்பட்டமைக்கான கட்டண அறவீடுகள் தனியார் முயற்சியொன்றினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.8.2 எத்துகால வெரல பூங்காவை வாடகைக்கு விடல்

(i) வாடகைக்கு விடப்பட்டிருந்த வெரல பூங்காவின் உரிமை சபைக்கு கையளிக்கப்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

(ii) வாடகை ஒப்பந்தத்தின் 19 ஆவது பிரிவின் பிரகாரம் மலசலகூட முறைமைகளுக்காக ஏற்படுகின்ற மின்சாரம் மற்றும் நீர்ப்பட்டியல்களை அறவீடு செய்வதற்கு முறைமையொன்று தயாரிக்கப்பட்டிராததுடன் அவ்வாறான செலவினங்களுக்காக எத்தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) வாடகை ஒப்பந்தத்தின் 09 ஆம் இலக்க நிபந்தனையின் பிரகாரம் வெரல பூங்காவை பரமரித்தல் வாடகையாளரினால் செய்யப்பட வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் வெரல பூங்காவை சுத்தம் செய்து பராமரிப்பதற்காக சபையினால் 03 ஊழியர்கள் நாளாந்தம் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iv) வெரல பூங்காவிற்குள் மதுபானம் கொண்டுவருவது தடைசெய்யப்பட்டுள்ளமை காணப்படுகின்ற அறிவித்தல் பலகை, அதிகூடிய அறவிட முடியுமான தரித்தல் கட்டணம் காணப்படுகின்ற அறிவித்தல் பலகை மற்றும் வெரல பூந்தோட்டம் திறந்து வைக்கப்படும் நேரம் காணப்படுகின்ற அறிவித்தல் பலகை என்பவற்றை

உள்ளடக்கிய 03 அறிவிவத்தல்கள் பலகைகள் பொது மக்களுக்கு தெரியக் கூடிய வகையில் பொருத்தப்பட வேண்டும் என நீர்கொழும்பு பொலீசினால் அறவுறுத்தல் வழங்கப்பப்பட்டிருந்த போதிலும் சபை அதன் பிகரோரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(v) வெரல பூங்காவினுள் அமைந்துள்ள குளிக்கும் இடத்திற்கு வழங்கப்பட்டுள்ள மின்சாரத்திற்காக தனியான மின்சார மாணியொன்று பொருத்தப்பட்டிராததுடன் மின்சாரம் பொது மின்சார மணியின் ஊடாக பெறப்பட்டிருந்தது. உப விதிகளை விதித்து சபைக்கு வருமானமொன்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் முழுமையான மின்சாரக் கட்டணமும் சபையினால் செலுத்தப்பட்டிருந்தன.

(vi) தனியார் தரப்பினரால் பராமரிக்கப்படுகின்ற வெரல பூங்காவின் சிற்றூண்டிச் சாலைக்காக அனுமதிப்பத்திரம் ஒன்றை விநியோகிப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.8.3 பராயமடையாத கணக்குகள்

-----------------------------------------------

ரூபா 29,738 பெறுமதியான பராமயமடையாத வைப்புக் கணக்குகள் குறிப்புக்களின் மூலமேனும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.8.4 இருப்புக் கட்டுப்பாடு

------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இருப்புப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த சகல பொருட்களின் மீதிகள் மற்றும் பெறுமதிகள் குறிப்பிடப்பட்டிருக்காமையினால் இருப்புப் பதிவேட்டின் மீதி மற்றும் களஞ்சிய பின்காட்டின் மீதிகள் என்பவற்றை இணக்கஞ் செய்ய முடியாதிருந்தது.

(ii) 2010 மார்ச் 30 ஆந் திகதியில் உள்ளவாறு 11 இருப்பு விடயங்களில் ரூபா 40,759 தொகையான குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

(iii) 2010 செப்தெம்பர் 07 ஆந் திகதியில் உள்ளவாறு சகல மின்சாரப் பொருட்கள் தொடர்பாக இருப்புப் பேரேடு மற்றும் பின்காட் என்பனவற்றை பரிசோதனை செய்த போது 10 பொருள் விடயங்களுக்குரிய இருப்புப் பேரேட்டில் இருப்பு மீதியொன்று இன்றி இருப்புக்கள் விநியோகிக்கப்பட்டிருந்தமையினால் அவ்விடயங்களில் எதிர்மறை மீதிகள் அவதானிக்கப்பட்டன. இதன் பிாகாரம்

இருப்புப் பேரேடு கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பேணப்பட்டிருக்காததுடன் எந்தவொரு மேற்பார்வை உத்தியோகத்தரும் இது தெடர்பாக பரீட்சிப்புக்களை மேற்கொள்ளாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(iv) மீளாய்வாண்டின் போது ரூபா 5,207,264 பெறுமதியான பொருட்கள் கிடைத்திருந்த போதிலும் அதற்குரிய முற்கொடுப்பனவுகள் தீர்க்கப்பட்டிராமையினால் பொருட்கள் பெற்று பணம் செலுத்தப்பட்டவைகள் கடன்கொடுத்தோர் கணக்குகளிலிருந்து அகற்றப்படாமையினால் அப்பெறுமானம் போலியான கடன்கொடுத்தோராக உருவாகியிருந்தது.

(v) பெறப்பட்ட முற்பணங்கள் செலுத்தித் தீர்க்கும் போது ரூபா 216,994 தொகைக்குரிய பொருட்களின் பெறுமதி குறைத்து தீர்க்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) ஊழியர் கடன் கட்டுப்பாடு